# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான
# இலகுவழி மாதிரிப் பரீட்சை - 40

**ஆசிரியர் : P.அம்பிகைபாகன்**

## வினாத்தாள் - 2

1 மணி 15 நிமிடங்கள்

(அரச பரீட்சையைத் தழுவிய மாதிரிப் பரீட்சை)

**பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.**

மனிதனின் அன்றாடத் தேவைகளுக்குப் பல பொருள்கள் தேவைப்படுகின்றன. அவற்றை எல்லாம் மனிதன் தானே உற்பத்தி செய்து கொள்ள முடிவதில்லை. அவை உற்பத்தியாகும் இடங்களுக்குச் சென்று வாங்கி வரவேண்டி இருக்கும். நகரங்களில் அருகிலுள்ள கடைகளில் எந்தப் பொருளையும் வாங்கலாம். கிராமங்களின் நிலை அப்படியில்லை. வெகு தொலைவில் உள்ள நகரங்களுக்குச் சென்று தான் பல பொருள்களை வாங்க வேண்டி இருக்கும்.

♦ **கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

01. மனிதனின் தேவைகளை நிறைவு செய்ய எவை தேவைப்படுகின்றன? (............................)
02. கிராமங்களின் நிலை எப்படி இல்லையெனப் பந்தியில் கூறப்பட்டுள்ளது? (............................)
03. தயாரித்தல் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக.(............................)
04. மிக அருகில் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. (............................)
05. மேலுள்ள பந்தியின்படி மனிதனின் அன்றாடத் தேவைகளை உடனுக்குடன் நிறைவு செய்ய எங்கு வாழ்வது பொருத்தமானது? (............................)

♦ **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுக.**

06. கிளி ......................................... விட்டு பிரியாதிருந்தது. ( மறத்தை, மரத்தை )
07. பனங்காட்டு நரி ..................................... அஞ்சாது. ( சளசளப்புக்கு , சலசலப்புக்கு )

♦ **கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

08. பத்து ஆண்டுகள் முடிவில் நடாத்தப்படும் விழா. (............................)
09. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவை. (............................)
10. அதிக பயன்கள் தரும் பனைமரத்தைக் குறிக்க உகந்த சொல். (............................)

♦ **பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

11. I AM THE BEST STUDENT ..............................................................................
12. THIS IS A LARGE HOUSE ..............................................................................

♦ **பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

13. தயவு செய்து உங்கள் பாடத்தைப் படியுங்கள் ..............................................................................

cc

14. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

01.  ..........................................

02.  ..........................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
அவர் என்னுடைய தந்தையார். ..............................................................................................................

16. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.
அபி அபே பந்தியட்ட யமுதா? ..............................................................................................................

♦ **தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

17. 01) சிலை : 1. ஓவியம் 2. காவியம் 3. உருவம் 4. வடிவம்
02) எச்சரிக்கை : 1. ஆபத்து 2. அறிவிப்பு 3. இடர் 4. துன்பம்
03) சந்தேகம் : 1. ஐயம் 2. குற்றம் 3. தவறு 4. எண்ணம்

♦ **பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் உள்ள சொல்லின் கருத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

18. 01) கிராம மக்களின் **ஒத்துழைப்பால்** தான் கொள்ளைக்காரர்கள் பிடிபட்டார்கள்.
..............................................................................................................
02) வீட்டை வாங்க **ஒப்பந்தம்** செய்து கொண்டோம்.
..............................................................................................................
03) இறைவன் **கருணையே** வடிவமானவர்.
..............................................................................................................

♦ **19 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.**

19. மரங்களில் தங்கி வாழும் பிராணி அல்லாதது எது?
1) வெளவால் 2) ஆந்தை 3) உடும்பு 4) அணில்

20. தனது உணவை உறிஞ்சிக் குடிப்பது அல்லாதது எது?
1) நுளம்பு 2) தவளை 3) பேன் 4) சிலந்தி

21. குட்டி ஈன்று பால் ஊட்டுவதில் வித்தியாசமான பிராணி எது?
1) கீரி 2) வெளவால் 3) அணில் 4) பசு

22. இலங்கையில் அதிக நீளமான நதி எது?
1) மகாவலி கங்கை 2) மாணிக்ககங்கை 3) களனிகங்கை 4) களுகங்கை

23. இந்தியாவின் தலைநகரம் எது?
1) முப்பாய் 2) புதுடெல்லி 3) சென்னை 4) திம்பு

24. இலங்கையின் தேசப்படத்தில் காடுகளைக் குறித்துக் காட்ட பயன்படும் நிறம் எது?
1) கறுப்பு 2) நீலம் 3) சிவப்பு 4) பச்சை

25. விலங்குகளினால் பரம்பலடையும் வித்து எது?
1) தென்னை 2) வெண்டி 3) நாயுருவி 4) அவரை

26. பின்வரும் வித்துக்களில் முற்காலத்தில் தங்கத்தை அளப்பதற்குப் பயன்படுத்திய வித்து எது?
1) குன்றிமணி 2) கடுகு 3) மிளகு 4) மஞ்சாடி

27. வீதி விபத்தொன்று நடைபெறும் வேளையில் நீர் ஆற்ற வேண்டிய கடமை அல்லாததைத் தெரிவு செய்க.
1) விபத்துக்குள்ளானவரை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல ஏற்பாடு செய்தல்.
2) விபத்துக்குள்ளானவருக்கு உம்மால் ஆற்றக் கூடிய முதலுதவிகளைச் செய்தல்.
3) நீரும் பதற்றமடையாது விபத்துக்குள்ளானவரும் பயப்படாத வகையில் நம்பிக்கையுடன் செயலாற்றல்.
4) விபத்துக்குக் காரணமானவரைப் பிடித்து உதைத்து அடித்து காயப்படுத்தல்.

28. விசர் நாய் கடித்த இடத்தை சுத்தம் செய்ய உகந்த திரவம் யாது?
1) சவர்க்கார நீர் 2) மண்ணெண்ணெய்
3) பெற்றோல் 4) குளிர்நீர்

♦ **தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடைகளைத் தருக.**

29. 1) **இலக்கங்களில் எழுதுக.**
பத்தாயிரத்து முந்நூற்று முப்பத்தாறு ..........................................................................................
2) **எழுத்துக்களில் எழுதுக.**
30,350 ..........................................................................................
3) **எண் கோலத்தில் அடுத்து வரும் இரு எண்களையம் எழுதுக.**
9955, 9965, 9975, 9985, ............................ , ......................................
4) **4, 6, 8 என்னும் எண் அட்டைகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க ஆறு எண்களை ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தி வெற்றிடங்களை நிரப்புக.**
............... , 486 , .................. , ................ , 846 , ....................

30. 1) தரப்பட்டுள்ள உருவில் $\frac{4}{10}$ ஐ நிழற்றுக.
2) அதில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியைப் பின்னமாக எழுதுக. ......................................................



31. ஆறு சிறுவர்கள் தம்மிடமுள்ள பணத்தைச் சமமாக இட்டு ஒன்று ரூபா 40 வீதம் 6 கேக் துண்டங்களையும், ஒன்று ரூபா 35 வீதம் 6 குளிர்பானப் போத்தல்களையும், ஒன்று ரூபா 20 வீதம் 12 கிழங்கு ரொட்டிகளையும் வாங்கித் தமக்கிடையில் சமமாகப் பகிர்ந்து உண்டார்கள்.
1) அவர்கள் செலவிட்ட மொத்தப் பணம் எவ்வளவு? ..........................................................
2) ஒவ்வொருவரும் இட்ட பணம் எவ்வளவு? ..........................................................
3) அனைவருக்கும் கிழங்கு ரொட்டி ஒவ்வொன்று வீதம் வாங்கியிருந்தால் அவர்கள் மீதப்படுத்தியிருக்கக்கூடிய மொத்தப்பணம் எவ்வளவு? ..........................................................

32. ஒரு வாடகைக்கார் முதல் பத்து கிலோமீற்றர்களுக்கு ரூபா 50 ப்படியும், இரண்டாவது இருபது கிலோமீற்றர் வரை ரூபா 40 ப்படியும், அதற்கு மேல் செல்லும் ஒவ்வொரு கிலோ மீற்றர்களுக்கும் ரூபா 30ப்படியும் அறவிடுவார்.
1) அவ்வாகனத்தில் ஒருவர் 25 கிலோமீற்றர்கள் செல்வதற்கு எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்? ..............................................
2) அவ்வாகனத்தில் அவர் 50 கிலோமீற்றர்கள் சென்றிருந்தால் எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்? ..............................................

33. ஒரு திரைப்பட அரங்கிற்கு வந்து அங்கு 2 மணித்தியாலங்கள் 45 நிமிடங்களைச் செலவிட்ட கபிலன் அங்கேயிருந்து பி.ப 6.15 இற்குப் புறப்பட்டான்.
1) கபிலன் திரைப்பட அரங்கிற்கு வந்த நேரம் யாது? ..............................................

2) கபிலன் புறப்பட்டுச் சென்ற நேரத்தை நியம நேரத்தில் தருக. ........................................................

34. 2013 ஆம் ஆண்டின் இறுதி மாதத்தில் அப்பாவின் வயது 42 ஆண்டுகள் 7 மாதங்களும், அம்மாவின் வயது 38 ஆண்டுகள் 9 மாதங்களும், எனது வயது 9 ஆண்டுகள் 6 மாதங்களும் ஆகும்.

1) எங்கள் மூவரினதும் வயதுகளின் கூட்டுத் தொகையைக் காண்க.
ஆண்டுகள் ........................... மாதங்கள் .............................

2) அம்மாவை விட அப்பா எத்தனை ஆண்டுகள், மாதங்கள் மூத்தவர் என்பதையும் காண்க.
ஆண்டுகள் ........................... மாதங்கள் .............................

35. 2 மீற்றர் 500 சென்றி மீற்றர் நீளமான கயிற்றை 300 சென்றி மீற்றர் நீளமுள்ள துண்டங்களாக வெட்டப்பட்டது.

1) எத்தனை துண்டுகள் கிடைக்கப் பெற்றன? ....................................................................

2) மீதமான துண்டின் நீளம் யாது? ....................................................................

36. உருக்களில் சமபக்க முக்கோணி, சதுரம், செவ்வகம் என்பன தரப்பட்டுள்ளன. அவற்றின் சுற்றளவுகளும் ஒரு பக்க அளவுகளும் தரப்பட்டுள்ளன. ஏனையவற்றை வடிவங்களின் பக்கங்களில் எழுதுக.

சுற்றளவுகள் 45cm 60cm 80cm




37. உருவில் உள்ள கூம்பில் இருக்கும்.



1) தட்டையான மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது? .......................

2) கூம்பிய மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது? .......................

3) இவ்வுருவை ஆக்குவதற்கு தேவையான அட்டைக் கீலங்கள் எவை? ............

38. பின்வரும் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

1) நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல ................................................ நன்று

2) செல்வம் என்பது ......... நிறைவே என்ற பாடத்திற்குப் பொருத்தமான பழமொழி.
போதும் என்ற மனமே .................................. மருந்து ஆகும்.

39. வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக் குறியிலிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ் கோடிடுக.

1) புத்தகங்கள் நிறைந்திருந்த பை பாரமாக ................................. . ( இருந்தது / இருந்தன )

2) தமிழ்ப்பாடப் புத்தகத்தின் ஒரு பகுதியாக ................................. ( உள்ளது / உள்ளவை ) கதையும், கவிதையும் ஆகும்.

3) திருக்குறள்கள் மாணவருக்கு மட்டுமன்றி அனைவருக்கும் ................................................................ ( பயன்படுகின்றது / பயன்படுகின்றன ) அல்லவா?

40. ''உறுதியும் உழைப்பும் உள்ளவனுக்கு வெற்றி திண்ணம்'' எனும் கருத்தில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

1) ..........................................................................................................................................

2) ..........................................................................................................................................

3) ..........................................................................................................................................